**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 299/2022**

2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் நாள் செவ்வாய் கிழமை ( DW2 ) –இன் வாக்குமூலம், 1873ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 11.11.2025 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | (DW2)ப. திலகர் | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது | |

<u>சாட்சி நீதிமன்றம் மூலம் அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் தற்போது நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கொள்ளிடம் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிப்புரிகிறேன். ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்ட ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். மாவட்ட ஆட்சியரின் 08.03.2018 தேதியிட்ட செயல்முறை உத்தரவு உண்மை நகல் **சா.சா.ஆ 1** . கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் குன்னம் ஊராட்சியில் 10 பயனாளிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் முருகேசன் என்பவர் 9வது பயனாளியாக உள்ளார். பயனாளிக்கு மதீப்பீடு மற்றும் ஒதுக்கீடு உண்மை நகல் **சா.சா.ஆ 2** அதில் மதீப்பீட்டு தொகை 1,80,000/–. போடப்பட்டு நான்கு தவணைகளாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அதிகாரபூர்வ இணையதள பயனாளிகள் பெயர் மற்றும் விவரப்பட்டியல் **சா.சா.ஆ 3** அதில் வரிசை எண் 8ல் முருகேசன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. 19.10.2015ல் திருத்திய நிர்வாக அனுமதி 2013 முதல் 2016 வரையிலான 3 ஆண்டுகளுக்கு பயனாளிகள் பட்டியலை நாகப்பட்டிணம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பியுள்ளோம் அது **சா.சா.ஆ 4** அதில் முருகேசன் 92 வது பயனாளியாக குறிப்பிடப்பட்டுள்ளார். அந்த வீட்டின் உரிமையாளர் வேலாயுதம் முருகேசன் வேலாயுதம்.

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**